உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

சுடர் : 41
கதிர் : 204

வியாழக்கிழமை
18 ஜூன் 2026

ஆனி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50




## ரணில் மட்டுமே நாட்டின் மீட்பர்!

முன்னாள் அமைச்சர் ராஜித நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 18
இந்த நாட்டை அனைத்து வகைகளிலும் மீட்கக்கூடிய தலைவர் ஒருவர் உள்ளார் என்றால், அது ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான் - இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

»11

யோஷித ராஜபக்ச

## காலையில் கைது மாலையில் பிணை

கொழும்பு, ஜூன் 18
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ச, ஊழல் தடுப்பு விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். கடற்படையில் முறைகேடாக இணைந்தமை, பிரிட்டன் கடற்படை பயிற்சிக்

»11

## இலங்கையின் மிகப்பெரும் புதைகுழியாக உருவெடுத்தது செம்மணி!

யாழ்ப்பாணம், ஜூன் 18
யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழிக்குள் நேற்று 14 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இலங்கையின் மிகப்பெரும் மனிதப் புதைகுழியாக செம்மணிப் புதைகுழி உருப்பெற்றுள்ளது.

»11



பலாலி வடக்கில் அமைக்கப்படும்

## இராணுவக் கட்டுமானத்தை உடன் இடித்து அகற்றுக!

யாழ்ப்பாணம், ஜூன் 18
பலாலி வடக்கில், பருத்தித்துறை பொன்னாலை வீதியில் அமைக்கப்படும் இராணுவக் கட்டுமானத்தை உடன் இடித்து அகற்றுமாறு வலி.வடக்குப் பிரதேசசபைத் தவிசாளர் சுகிர்தன் அறிவித்தல் அனுப்பி

»11

## தொடர் திருட்டுகள் ஒருவருக்கு கடூழியம்

விரிவு பக்கம்:-11

## பஸில் ராஜபக்சவை உடன் கைதுசெய்க!

நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு, ஜூன் 18
அரசாங்க நிதி முறைகேடு குற்றச்சாட்டில் பஸில் ராஜபக்சவைக் கைதுசெய்யுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் நிதியை முறைகேடாகப்

»11

## எரிபொருள் விலைகள் தற்போது குறையாது!

அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 18
உலக சந்தையில் எரிபொருள் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், இலங்கையில் தற்போது விலைக் குறைப்புக்குச் சாத்தியம் இல்லை என

»11



கிளிநொச்சியில் சோகம்

## மோ.சைக்கிள் விபத்து இளைஞர் ஒருவர் பலி


கிளிநொச்சி, ஜூன் 18
கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் மோட்டார்சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். ஆனந்தராஜ் நிதர்சன் (வயது-35) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

»11



காங்கேசன்துறை ஊடாக

## கடத்திய தங்கத்தை விழுங்கிய கில்லாடிகள்



26 பேர் தடுப்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 18
இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்த முற்பட்டனர் என்ற சந்தேகத்தில் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் வைத்து 26 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிவகங்கை கப்பலில் காங்கேசன்துறையில் இருந்து

»11

கைதாவதைத் தடுக்கக்கோரிய

## கோத்தாபயவின் மனு இன்று விசாரணைக்கு

கொழும்பு, ஜூன் 18
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தன்னைக் கைதுசெய்வதைத் தடுக்கக்கோரிய கோத்தாபயவின் மனு மீது இன்று விசாரணை நடைபெறவுள்ளது.
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தான் கைதாவதைத் தடுத்து நிறுத்துமாறு மேன்முறையீட்டு

»11

முச்சந்தி முனி

"பிடிபட்டதும் உவைக்கு உடனேயே பிணைகிடைக்கிற அதிசயம் என்னெண்டு விளங்கேலை கண்டியளோ"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 17.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4463
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 35 36 75 76
விசேட எழுத்து: E

**ஹந்தஹரண ராசி சுப பலன்**
திகதி: 17.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1530
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 16 38 57 58

**NLB ஜய**
திகதி: 17.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0489
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 3 8 8 3

**மெகா பவர்**
திகதி: 17.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2569
ஆங்கில எழுத்து: I
சுப்பர் இலக்கம்: 15
வெற்றி இலக்கங்கள்: 09 49 51 76

**மஹஜன சம்பத**
திகதி: 17.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6221
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 6 2 2 8 9 9

**தன நிதானய**
திகதி: 17.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2251
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 08 47 56 72
விசேட எழுத்து: F

**சுப தவசக்**
திகதி: 17.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0337
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 19 25 64

# வடக்கில் 77 சித்த வைத்தியர்கள் பதிலீடுகள் இன்றி இடமாற்றம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, ஜூன் 18**

**வன்னித் தேர்தல் மாவட்டத்துக்குட்பட்ட சுதேச வைத்தியசாலைகளில், தகுந்த பதிலீடுகள் வழங்கப்படாமல் சுதேச வைத்தியசாலையர்கள் பெருமளவில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் கடுமையான வைத்தியசாலை பற்றாக்குறை நிலவுகின்றது. இதற்கு உடனடித் தீர்வு வழங்கவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார். வடமாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்கள ஆணையாளர் தில்லையம்பலம் சர்வானந்தனுக்கு கடிதமொன்றை அனுப்பி அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

2025ஆம் ஆண்டுக்கான இலங்கை ஆயுர்வேத வைத்தியசேவையின் வருடாந்த இடமாற்றங்களின்போது, மாகாணம் முழுவதும் பதிலீடு எவருமே நியமிக்கப்படாமல் 77 வைத்தியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த 77 வெற்றிடங்களில் 17 இடமாற்றங்கள் வன்னி மாவட்டத்தைச் (முல்லைத்தீவு, மன்னார், வவுனியா) சார்ந்த சுதேச வைத்தியசாலைகளிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய தன்னிச்சையான மற்றும் பதிலீடு இன்றிய இடமாற்றங்களினால் வன்னி மாவட்டத்தின் கிராமியச் சித்த மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அன்றாடச் செயற்பாடுகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சிகிச்சைகளுக்காக வரும் ஏழைப் பொதுமக்கள் கடுமையான அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

எனவே இடமாற்றம் பெற்றுச் சென்ற வைத்தியர்ளின் இடங்களுக்கு உடனடியாக வேறு நிரந்தர வைத்தியர்களைப் பதிலீடாக நியமிக்கவேண்டும்.

அல்லது, திணைக்களத்தினால் முன்னதாகத்தீர்மானிக்கப்பட்டபடி, தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் புதிய சுதேச வைத்தியர்களைச்சேவையில் இணைத்து வன்னி மாவட்டத்துக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளனர். இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடமாகாண ஆளுநர், வடமாகாண பிரதம செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-246)

# அச்சுவேலியில் வீடுபுகுந்து பெற்றோல் குண்டுவீச்சு!

## இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 18

அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தென்மூலை பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை வேளையில் வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பல், வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள், முன்றலில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டி என்பவற்றை அடித்து நொறுக்கியதுடன், வீட்டுக்குள் பெற்றோல் குண்டையும் வீசிப் பொருள்களைச் சேதப்படுத்திவிட்டுத் தப்பியோடியுள்ளது.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட தீவிர விசாரணையில் இரண்டு பிரதான சந்தேகநபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸ் விசாரணைகளின்படி, பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளருக்கும் அந்தப் பகுதியைச்சேர்ந்த சில இளைஞர்களுக்கும் இடையே ஏற்கனவே ஏற்பட்ட முறுகல் நிலையே தாக்குதலுக்குக் காரணமெனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் இந்தக் குற்றச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேகநபர்கள் தற்போது தலைமறைவாக உள்ள நிலையில், அவர்களையும் உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு நீதவான் பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளார். (ச-23)



# எரிபொருள் பரிசோதனையில் தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்

கிளிநொச்சி, ஜூன் 18

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் கரைச்சிப் பிரதேச சபையினரால் எரிபொருள் நுகர்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பொழுது மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது. குறித்த சம்பவத்தின்போது இவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. குறித்த சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-113)

**சுபிரி தன சம்பத**
திகதி: 17.06.2026 | தினம்: புதன்கிழமை
வெற்றி வாரம்: 0929
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கம்: 9 5 3 3 4 8

**Super Ball** DLB
திகதி: 17.06.2026 | தினம்: புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3195
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கம்: 09 12 33 41

**சனிதா** DLB
திகதி: 17.06.2026 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கம்: 05 16 53 64
வெற்றி வாரம்: 5356

**SASIRI** DLB
திகதி: 17.06.2026 | தினம்: புதன்கிழமை
வெற்றி வாரம்: 1025
வெற்றி இலக்கம்: 09 15 26

**லக்ன ராசி** DLB
திகதி: 17.06.2026 | தினம்: புதன்கிழமை
மகரம்
வெற்றி இலக்கம்: 13 31 41 51
சீட்டிழுப்பு வாரம்: 4907

**KAPRUKA** DLB
திகதி: 17.06.2026 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: X
சுப்பர் இலக்கம்: 27
வெற்றி இலக்கம்: 07 21 70 72
வெற்றி வாரம்: 2371

**அத கோடிபதி** DLB
திகதி: 17.06.2026 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கம்: 24 36 49 68
வெற்றி வாரம்: 3021

# விரும்பும் விசாரணை அதிகாரிகளை சந்தேகநபர்கள் தீர்மானிக்கமுடியாது

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

விசாரணை அதிகாரிகளை மாற்றுமாறு சந்தேகநபர் கோருவது ஏற்புடையது அல்ல. இரகசியங்களை மறைக்காமல் சுரேஷ் சாலே விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

சுரேஷ் சாலே புலனாய்வு அதிகாரியாக, இராணுவ அதிகாரியாக இருந்தவர். எனவே, அவர் விசாரணைக்கு ஒத்துழைக்கவேண்டும். விசாரணையாளர்களை மாற்றுமாறு கோரிக்கை விடுப்பது ஏற்புடையது அல்ல. இறந்தாலும் பரவாயில்லை இரகசியம் பாதுகாக்கப்படவேண்டும் எனக் குழுவொன்று கருத்து வெளியிடுகின்றது. கூடாரம் அமைத்து நாடகம் அரங்கேற்றப்படுகின்றது. சிலர் கைதுசெய்யப்படுவதை தடுக்க நீதிமன்றத்தை நாடுகின்றனர். எனவே, விசாரணையால் யார், யார் குழப்பம் அடைந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. சந்தேகநபர்கள் கோரும், விசாரணை அதிகாரிகளை வழங்கமுடியாது. விருப்பமான மருத்துவர்கள், விருப்பமான சட்டத்தரணிகளை நாடுவதுபோல, சந்தேகநபர்கள் விருப்பமான விசாரணை அதிகாரிகளை கோருவது ஏற்புடையது அல்ல - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media




# பொருளாதாரத்தில் தன்னிறைவுபெற தேசிய ஏற்றுமதித்திட்டம் அறிமுகம்!

கொழும்பு, ஜூன் 18

**இலங்கை பொருளாதாரத்தை இறக்குமதியில் தங்கியிருக்கும் ஒரு நாடாக இருந்து, முழுமையாக ஏற்றுமதி சார்ந்த பொருளாதார மாக மாற்றியமைப்பதற்காக 'தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித்திட்டம் 2026 - 2030' கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.**

இந்த அறிமுக நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க, கடந்த 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், இலங்கை தற்போது படிப்படியான மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கிய நேர்மறையான மாற்றத்தை எட்டியுள்ளது.

தற்போதைய சூழலில் சுற்றுலாத்துறை மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்கள் மூலம் ஓரளவு பொருளாதார முன்னேற்றம் காணப்பட்டாலும், நீண்டகால நிலைக்கு இவை மட்டுமே போதுமானதல்ல. சர்வதேச சந்தையில் திடீரென ஏற்படும் மாற்றங்கள் மற்றும் உலகளாவிய புவிசார் அரசியல் நெருக்கடிகளிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கவேண்டுமாயின், மிகவும் வலுவானதொரு ஏற்றுமதித்துறை இலங்கைக்கு அவசியமாகியுள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதிச் சந்தையில் சுமார் 40 சதவீதம் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவை மட்டுமே சார்ந்துள்ளது.

பாரம்பரிய ஐரோப்பிய, அமெரிக்கச் சந்தைகளைத் தாண்டி ஆசிய மற்றும் பிற புதிய பிராந்திய சந்தைகளுக்குள் நுழைதல் வேண்டும்.

அரசாங்கம், தனியார் துறை மற்றும் அனைத்துப் பங்குதாரர்களும் ஒருங்கிணைந்து செயற்படுவதன்மூலம் மட்டுமே நிலையான பொருளாதார வளர்ச்சியை எட்டமுடியும் - என்றார். (ச-அ)

## இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவி

கொழும்பு, ஜூன் 18

அரசாங்கத்தின் அவசர கோரிக்கைக்கு இணங்க, இந்திய இராணுவத்தின் செயற்பாட்டு இருப்புகளிலிருந்து 5.5 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவப்பொருள்களை இலங்கை இராணுவத்துக்கு இலவசமாக வழங்குவதற்கு இந்தியப் பாதுகாப்பு அமைச்சு ஒப்புதல் அளித்து விநியோகித்துள்ளது.

இதற்கமைய, 'ஐ.என்.எஸ். சாரதா' என்ற இந்தியக் கடற்படைக் கப்பல் மூலம் இந்தப் பொருள்கள் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டுக் கையளிக்கப்பட்டன. கையளிப்பு நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-இ)

ஏற்றுமதி வருமானம்

## 2030ஆம் ஆண்டுக்குள் 36 பில்லியன் டொலர் இலக்கு!

கொழும்பு, ஜூன் 18

இலங்கையின் பொருளாதாரத்தை உலகளாவிய ரீதியில் பன்முகப்படுத்தி வலுப்படுத்தும்நோக்கில், புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் 2026 - 2030' மூலம் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் 36 பில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திட்டமிடப்படாத பொருளாதாரப் பயணங்களைத் தவிர்த்து, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய முறையான தேசியக் கொள்கையின்கீழ் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கம். அடுத்த 4 ஆண்டுகளில் இதனை 36 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. - என்றார். (ச-இ)

## போதைப்பொருளுடன் மாணவர் கைது



கொழும்பு, ஜூன் 18

'சமன் கொல்லா' என்ற பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரின் போதைப்பொருள் கடத்தலை வழிநடத்திய குற்றச்சாட்டில் 10ஆம் தரத்தில் கல்வி பயிலும் 15 வயது பாடசாலை மாணவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைச் சந்தேகநபரின் கைபேசியை ஆய்வு செய்தபோதே குறித்த தகவல்கள் கண்டறியப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## பொலிஸ் சேவை கருத்துப்பெற 'கியூ ஆர்' முறைமை அறிமுகம்!

கொழும்பு, ஜூன் 18

இலங்கைப் பொலிஸாரினால் வழங்கப்படும் சேவைகளின் தரம் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கில், பொதுமக்களின் நேர்மறையான கருத்துகள், முறைப்பாடுகள், பாராட்டுகள் மற்றும் ஆலோசனைகளை நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்காகப் புதிய கியூ.ஆர் குறியீட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய "Sri Lanka Police Community Feedback Portal" என்றபெயரில்நவீன இணையவழி டிஜிற்றல் தளம் ஒன்று முழுமையாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களின் ஸ்மார்ட்போன்கள் மூலம் பொலிஸ் நிலையங்களில் உள்ள கியூ.ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து கருத்துகளைப் பகிரலாம். என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## இரவல் கொய்யகம்

**உ**ளூரார் வீட்டு நெய்யில பலகாரம் சுடுறதுக்கே தனித்திறமை வேணும். அப்பிடிச் சுட்ட பலகாரத்தை தான் மட்டும் தான் சுட்டனான் எண்டு பேரெடுக்கிற தெண்டா அது வேற லெவல் வேலை. அப்பிடி ஒரு வேலையைத்தான் கிட்டடியில ஒரு கொம்பனி பார்த்து வைச்சிருக்குது. கொஞ்சநாளைக்கு முதல் கொழும்பு கோல்பேஸில (காலிமுகத்திடலில) கனபேர் ஒரே இடத்தில பரதநாட்டியம் ஆடி கின்னஸ் சாதனை செய்ததை அறிஞ்சிருப்பியள். அந்தச் சாதனையில கிட்டத்தட்ட ஐயாயிரம் பேர் ஒரே பாட்டுக்கு, ஒரே மாதிரி உடுப்புப் போட்டு, ஒரே மாதிரி அபிநயத்தோட ஆடினவை. ஆனால் அவை எல்லாரும் வேற வேற இடங்களில இருந்து தான் கொழும்புக்குப் போனவை. ஒவ்வொரு ஏரியாவிலையும் இருக்கிற டான்ஸ் ரீச்சர்மாரிட்ட கனபேர் டான்ஸ் பழகுவினம், அப்பிடி அவையிட்ட டான்ஸ் பழகிற பிள்ளையளை இந்தக் கின்னஸ் சாதனைக்குக் கூட்டிக்கொண்டு வரச்சொல்லி இந்தியாவைச் சேர்ந்த சங்கமம் எண்ட கொம்பனி கேட்டிருக்குது.

கின்னஸ் சாதனையில தாங்களும் பங்குபற்றிற தெண்டால் எல்லாருக்கும் இயல்பா ஒரு ஆசை வரும்தானே.அதால டான்ஸ் ரீச்சர்மாரெல்லாம் இதுக்கு ஓகே சொல்லி, சங்கமம் கொம்பனி சொன்ன மாதிரி கலரில எல்லாருக்கும் ஒரே மாதிரி உடுப்புத் தைச்சு, ஒரே விதமான டான்ஸைப் பழக்கிக்கொண்டு கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போனவை. இந்த உடுப்பு, போக்குவரத்து எல்லாத்துக்கும் அந்தந்தப் பிள்ளையள் தான் காசு குடுக்கோணும். அப்பிடி ஆளுக்கு 5 ஆயிரம் படி வாங்கியிருக்கினம். அப்படி இப்பிடி பிள்ளையளிட்ட வாங்கின காசே ரண்டரைக் கோடி வரும். அதைவிட நகைசெற், தங்குமிடம், சாப்பாடு, போறவாற வழியளில தேத்தண்ணி எண்டு எல்லாமே பிள்ளையளின்ர கணக்குத்தான். கூட்டிக் கழிச்சுப் பார்த்தால் வெளிமாவட்டங்களில இருந்து கின்னஸ் சாதனைக்காக கோல்பேஸுக்கு டான்ஸ் ஆடப்போன பிள்ளைளுக்கு 20 ஆயிரமெண்டாலும் செலவு வந்திருக்கும். அப்பிடி எல்லாப் பிள்ளையளும் காசைச் செலவழிச்சு, உந்த வெயிலுக்குள்ள கோல்பேஸில நிண்டு டான்ஸ் ஆடி ஒருமாதிரிச் சாதனையும் படைச்சாச்சு.

ஆனால் கடைசில கின்னஸ் சேர்டிபிக்கெட்டில இவையெல்லாரையும் ஒழுங்குபடுத்தின கொம்பனியைச் சேர்ந்த வெண்மதி எண்டவா தான் இந்தச் சாதனைக்குச் சொந்தக்காரி எண்டு போட்டிருக்குது. உடுப்பில இருந்து நகைசெற், போக்குவரத்து, சாப்பாடு எண்டு எல்லாச் செலவையும் 5 ஆயிரம் பிள்ளையளும் செய்ய பேர் மட்டும் ஓராளுக்கு எண்டால் என்ன நியாயம். குறைஞ்சபட்சம் தங்கட கொம்பனிக் காசைச் செலவழிச்சு உந்த நிகழ்ச்சியை நடத்தியிருந்தாலாவது, 'இவ்வளவு காசைப் போட்டவை பேரை எடுக்கட்டும்' எண்டு விடலாம். ஆனால் எல்லாத்தையும் மற்றவையின்ர காசில செய்து, மற்றவையை வைச்சே ஆடவும் செய்துபோட்டு, சேர்ட்டிபிக்கெட்டில மட்டும் ஓராளின்ர பேரைப் போட்டு அந்தக் கொம்பனி செய்தது பெரும் மோசடி வேலை. இனி இதே மாதிரி வேற ஆக்களும் கின்னஸ் எண்டு சொல்லி, காசு உழைக்கவும், பேரெடுக்கவும் வெளிக்கிடுவினம். நெடுகலும் எங்கட தலையில மிளகாய் அரைச்சு, இரவல் சீலையில கொய்யகம் போடுறவைக்கு இடமளிக்காமல் இருக்கிறது எங்கட கெட்டித்தனம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வீடமைப்பு நிதிக்கான காசோலை வழங்கல்



யாழ்ப்பாணம், ஜூன் 18

2026ஆம்ஆண்டுக்கானவீடமைப்புத்திட்டப் பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வும் 2025ஆம் ஆண்டு வீடமைப்புத் திருத்தத்தின்கீழ் பயனடைந்தவர்களுக்கான உரிம ஆவணங்கள் வழங்கும் நிகழ்வும் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.நிகழ்வில் வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் பிரதியமைச்சர் டி.பி. சரத் நிகழ்வில் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக க. இளங்குமரன், ஜெ.ரஜீவன், சிறீபவனாந்தராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-17)

# பெண் நாய்களுடன் சேர்த்து ஆண் நாய்களுக்கும் கருத்தடை

## அடுத்த மாதம் நடைமுறை!

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கு மாகாணத்தில் தெருநாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும்நோக்கில், சுமார் 15,000 நாய்களுக்குக் கருத்தடைச் சிகிச்சை அளிக்கக்கூடிய மருந்துகள் கைவசம் தயாராகவுள்ளநிலையில், இம்முறை பெண் நாய்களுடன் சேர்த்து ஆண் நாய்களுக்கும் சமாந்தரமாகக் கருத்தடைச் சிகிச்சையை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். சுண்டுக்குளியிலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம் உள்ளிட்ட துறைகளுக்கான மாதாந்த விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட பெண் நாய்களுக்கான கருத்தடைச் சிகிச்சையை இந்த ஆண்டும் தொடர்வது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதற்கான நடைமுறைகளை வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி எஸ். வசீகரன் தெளிவுபடுத்தினார். வடக்கு மாகாணச் சுகாதாரத் திணைக்களமும் தனியானதொரு கருத்தடைத் திட்டத்தை முன்னெடுப்பதால் இரு திணைக்களங்களும் ஒருங்கிணைந்து பிரதேசங்களைப் பகிர்ந்தளித்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதற்கமைய சட்டரீதியான ஏற்பாடுகள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பின் அவசியம் குறித்துப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திய பின்னர் அடுத்த மாதம் முதல் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. (ச-66)



# யாழில் வீட்டுத்திட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீட்டுத்திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடுகள் பயனாளிகளிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட கொழும்புத்துறை, சாஸ்திரியார் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு வீடும் மணியம்தோட்டம் பகுதியில் அமைக்கப்பட்ட மூன்று புதிய வீடுகளும் பயனாளிகளிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன. வீடமைப்பு மற்றும் நீர்வழங்கல் பிரதியமைச்சர் டி.பி.சரத் இந்தப் புதிய வீடுகளை பயனாளிக் குடும்பங்களிடம் கையளித்தார். (ச-17)

# இலுப்பையடி விநாயகருக்குக் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.


தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச-17)

# உணவக உரிமையாளர்களுக்கு சுகாதார விதிகள் தெளிவூட்டல்!

வவுனியா, ஜூன் 18

வவுனியாவில் உணவகங்களை நடத்தும் உரிமையாளர்கள் மற்றும் அது சார்ந்த பிரதிநிதிகளுக்கான தெளிவூட்டல் கலந்துரையாடல் ஒன்று வவுனியா வர்த்தகர்சங்கக் கட்டடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வர்த்தகர் சங்கத்தின் தலைவர் கே.கிருஸ்ணமூர்த்தியின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், உணவகங்களில் உணவுகளைக் கையாளும் முறை மற்றும் உணவுப்பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக வவுனியா நகர சுகாதாரப் பரிசோதகரால் தெளிவூட்டப்பட்டது. அத்துடன் உணவகங்கள் தொடர்பாகவும் அதனை நடத்துபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கருத்துகள் பரிமாறப்பட்டன. (ச-110)



# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்துமுடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**கடகம்:** பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும். பிள்ளைகள்வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்கிவிடுவது சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** தெய்வஅனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும்.

**தனுசு:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்குமேல் மனதில் சற்றுக் குழப்பம் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். அதே நேரம் திடீர்ச்செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு நவீன டிசைனில் புதிய ஆடைகளை வாங்கும் யோகம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வெர்டே எனும் விண்மீன்..!

**கா**ல்பந்தாட்ட உலகக்கிண்ணத்தொடர் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் தற்போது நடைபெற்றுவருகின்றது. அசுர பலம்மிக்க போர்த்துக்கல், நடப்புச் சம்பியன் ஆர்ஜென்ரீனா, அதிகளவு ரசிகர்களை வைத்திருக்கும் பிரேசில் என்று அனைத்து அணிகளும் உச்ச மகுடத்துக்காக ஓடிக் கொண்டிருக்கையில், ஒட்டுமொத்த உலகின் கவனத்தையும் ஒரே இரவில் கட்டியிழுத்திருக்கின்றது கபோ வெர்டே எனும் மிகச்சிறிய தீவுநாடு. முன்னாள் உலகச்சம்பியனான ஸ்பெய்னுக்கு எதிரான ஆட்டத்தை சமநிலையில் முடித்து அதிர்ச்சி மேல் அதிர்ச்சிகொடுத்த கபோ வெர்டேயின் சனத்தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் ஐந்தரை லட்சம். ஆனால், இரண்டைக்கோடி சனத்தொகையுள்ள இலங்கையால் கால்பந்தாட்டத் தரப்படுத்தலில் 187ஆவது இடத்தையே பிடிக்க முடிந்திருக்கின்றது. கிணற்றில்போட்ட கல்லாக அந்தத் தரநிலையைச் சுற்றியே இலங்கை நீண்ட காலமாகச் சுழன்று கொண்டிருக்கின்றது.

இலங்கையை விடக் குறைந்த சனத்தொகையும், மிகக்குறைந்த பொருளாதாரத் திரட்சியும் உள்ள தீவுநாடுகளால் சாதிக்க முடிந்ததை, இலங்கையால் ஏன் சாதிக்கமுடியவில்லை? என்ற கேள்விக்கு ஊழலையும், இனவாதத்தையும்விட வேறு என்ன பதில் இருந்துவிடப் போகின்றது. உலகக்கிண்ண கால்பந்தாட்டத்தொடரில் களமிறங்குவதும், சர்வதேசத்தின் கவனத்தைப் பெறுவதும் ஒருபுறம் இருக்கட்டும். கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிலை என்ன தெரியுமா? இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்குத் தடைவிதித்து நடவடிக்கை எடுத்திருந்தது சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனமான 'பிபா'. இலங்கையின் கால்பந்தாட்ட சம்மேளனத்தில் நிலவிய கடைகெட்ட அரசியல் 'நிர்வாகச் சீரழிவுகள்' சர்வதேச ஒப்பந்தங்களை மதிக்காத தன்மை இவையே சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு பிரதான காரணம்.

இலங்கையிலிருந்து எவ்வாறு இனத்துவேசத்தை நீக்கிவிட முடியாதோ அவ்வாறுதான் இலங்கையின் விளையாட்டுத்துறையிலிருந்து அரசியலையும் நீக்கிவிட முடியாது என்ற நிலைமை வந்தாயிற்று. அரசியல் 'பூதங்களுக்கு' இதனால் எந்தப் பாதிப்புமில்லை. பாதிப்பு முழுக்கமுழுக்க இந்த நாட்டின் இளைஞர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும்தான். ஊழல்வாதிகளின் குளறுபடிகளால் ஏராளமான வீரர்களின் கனவு உழைப்பு அர்ப்பணிப்பு என்பன அனுதினம் கொன்று புதைக்கப்படுகின்றது. கால்பந்தாட்ட அரங்கில் இலங்கையின் நிலைமை என்பது அப்பட்டமான தலைகுனிவு. இந்தக் கேடுகெட்ட அரசியல் இலங்கையிலிருந்து துடைத்தெறியப்படும்வரையில் இலங்கை இவ்வாறான பின்னடைவுகளைச் சந்தித்தே தீரும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டின் விளையாட்டுத் துறைகளை மேம்படுத்த எத்தனிக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், பாதுகாப்புத்துறைக்கும், பௌத்த மேலாதிக்க சிந்தனைக்கும் நிதியை வாரி வழங்கிக்கொண்டு இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துவதென்பது சாத்தியமற்ற விடயமே. அதைத் திசைகாட்டி அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும். விளையாட்டுத்துறைகளை நோக்கி அதிகளவான ஒதுக்கீடுகள் திருப்பப்பட வேண்டிய காலமிது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## பொய்யாமொழி

**பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்**

**பொருள்:** பகை பாவம் அச்சம் பழி என்னும் இந்நான்கு குற்றங்களும் பிறன் மனைவியிடத்து நெறி தவறி நடப்பவனிடத்திலிருந்து நீங்காவாம்.




டித்வா பாதிப்புப் பணிகளுக்கு

# ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் டொலர்!

**கொழும்பு, ஜூன் 18**

**கடந்த 2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையைத் தாக்கிய டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்களைச் சீரமைப்பதற்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார வளர்ச்சி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கே இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அவசர கோரிக்கையை ஏற்று, 'டித்வா புயலுக்குப் பின்னரான சீரமைப்பு மற்றும் வாழ்வாதார உதவித்திட்டம்' என்ற திட்டத்தை செயற்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்க உடன்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து மொத்தமாக 200 மில்லியன் டொலர்கள் கடனாகப் பெறப்படவுள்ளன. (ச-இ)



# கச்சா எண்ணெய் விலை சரிந்தது!

கொழும்பு, ஜூன் 18

உலகச் சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை நேற்று 75 அமெரிக்க டொலர் என்ற அளவை எட்டியதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்றுக் காலை ஒரு பரல் WTI கச்சா எண்ணெயின் விலை 75 அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது.

மேலும் ஒரு பீப்பாய் ப்ரெண்ட் கச்சா எண்ணெயின் விலை 78.72 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

அதேவேளை ஒரு பீப்பாய் மர்பான் கச்சாஎண்ணெயின் விலை 71.81 டொலராகக் குறைந்துள்ளது. (ச-இ)

# மகன் கொலை தந்தை கைது!

கொழும்பு, ஜூன் 18

நுவரெலியா, அம்பேவெலையில் வீடொன்றில் மகனை அடித்துக் கொலைசெய்த குற்றச்சாட்டில் தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவத்தில் 30 வயதானவரே உயிரிழந்துள்ளார்

மகனுக்கும் தந்தைக்கும் இடையில் ஏற்பட்ட பணத்தகராறே மோதலுக்கு காரணமென விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)




# ஏ-9 வீதி விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 18

யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியின் பூனாவ, கல்கண்டேகம பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பூநாவ பொலிஸார் தெரிவித்தனர். நுரைச்சோலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்ற பட்டா வாகனம் திடீரென நிறுத்தப்பட்ட வேளையில் பின்னால் வந்த உரம்ஏற்றிவந்த லொறி அதனுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் நுரைச்சோலைப் பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 43 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)

# 14 நாள்களில் 54,465 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜூன் 18

ஜூன் மாதத்தின் முதல் 14 நாள்களுக்குள் 54,465 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இக்காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து மட்டும் 21,839 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளனர். இது மொத்த வருகையாளர்கள் எண்ணிக்கையில் 42 வீதமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை-ஆனி 05
19.06.2026
சுபநேரம் : 07.23 - 08.53
ராகுகாலம் : 01.23 - 02.53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




முள்ளியவளையில்

# ஆளணிப் பற்றாக்குறையுடன் கிராமிய சித்தவைத்தியசாலை

**முல்லைத்தீவு, ஜூன் 18**

**முல்லைத்தீவு, முள்ளியவளைக் கிராமிய சித்தவைத்தியசாலையில் நீண்ட காலமாக நிலவிவரும் ஆளணிப் பற்றாக்குறைகள் உள்ளிட்ட பல்வேறு வளக்குறைபாடுகள் காரணமாக பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருவதாக கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

தற்போது இந்த வைத்தியசாலை மிகவும் குறுகியதொரு தற்காலிகக் கட்டடத்திலேயே இயங்கிவருகின்றது. ஆனால், பாரம்பரிய சித்த வைத்தியசாலை நாடிவரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிகின்றது.

வெளிநோயாளர் பிரிவு, உள்நோயாளர் பிரிவு, பஞ்சகர்மா சிகிச்சைப் பிரிவு மற்றும் மூலிகைத்தோட்டம் போன்ற அத்தியாவசிய வசதிகளுக்கான தேவை இருந்தபோதிலும், இடவசதி பற்றாக்குறை காரணமாக வினைத்திறனான சேவையளிப்பில் கடும் சவால்கள் நிலவுவதாக வைத்தியசாலை பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். நோயாளர்களைத் தங்க வைத்துச் சிகிச்சை அளிக்க வேண்டிய இந்த வைத்தியசாலை, இடப்பற்றாக்குறையால் தற்போது வெறும் வெளிநோயாளர் சேவையுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் நீண்டகாலப் பக்கவாத நோயாளிகள், தங்கியிருந்து விசேட சிகிச்சை மற்றும் கண்காணிப்பைப் பெறவேண்டிய முதியவர்கள் எனப் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

இங்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை 13 ஆக உள்ள போதும் தற்போது மருத்துவப் பொறுப்பதிகாரி ஒருவரும், இரு சாதாரண பணியாளர்களும் என மொத்தம் 3 பேர் மட்டுமே முழு வைத்திய சாலையையும் சிரமத்துக்கு மத்தியில் இயக்கிவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து அவர் வைத்தியசாலைக்கு நேரடியாகச் சென்று களநிலைவரங்களைக் கேட்டறிந்தார்.

மேலும் முள்ளியவளை கிராமிய சித்த வைத்தியசாலைக்கு நிரந்தரமான சொந்த இடவசதியை ஏற்படுத்தும் நோக்கில், பொருத்தமான மாற்றுக் காணி ஒதுக்கீடு செய்வது குறித்துப் பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடவுள்ளேன். மருத்துவமனையின் சேவைகளை மேம்படுத்தத் தேவையான ஆளணி மற்றும் உட்கட்டமைப்பு வளங்களை மத்திய மற்றும் மாகாண அரசமட்டங்களில் பேசிப் பெற்றுத்தர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ச-246)

# லஞ்சீற் கட்டுப்பாடுகள் வடக்கில் முன்னேற்றம்!

## ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கு மாகாணத்தில் லஞ்சீற் பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பான முன்னேற்றம் காணப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மாதாந்த விசேட முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் பொலித்தீன் மற்றும் ஒருநாள் பாவனைக்குரிய பிளாஸ்ரிக் கப்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார். அத்துடன், லஞ்சீற் பாவனையைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் உள்ளூராட்சிமன்றங்கள் சிறப்பாகச் செயலாற்றிவருகின்றன - என்றார். இதன்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ள புதிய சுற்றாடல் சட்டவரைவு நடைமுறைக்கு வந்ததும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவதில் மேலும் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க முடியுமென மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் எல்.சி.ஆனந்த் தெரிவித்தார். (ச-66)



# பல்லவராயன்கட்டு கிழக்குக்கு விவாகப்பதிவாளர் நியமனம்!

கிளிநொச்சி, ஜூன் 18

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பல்லவராயன்கட்டு கிழக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவாளராகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி கஜதீபன் விதுஜா கிளிநொச்சி மாவட்டச்செயலர்எஸ்முரளிதரனிடம்தனதுநியமனக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இந்த நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வில் மாவட்டக் காணி பதிவாளரும் கலந்துகொண்டார்.

பல்லவராயன்கட்டு கிழக்குப் பிரிவுக்கு நீண்டகாலமாக பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவாளர் நியமிக்கப்படாத நிலையில், பல்லவராயன்கட்டு மேற்குப் பிரிவின் பதிவாளரே பதில் கடமையாற்றிவந்தார். இந்த நிலையில், பல்லவராயன்கட்டு கிழக்குப் பிரிவுக்கென தனியான பதிவாளர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

காணாமற்போன மீனவரின்

# இரு பிள்ளைகளின் கல்விச்செலவினை ஏற்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி!

யாழ்ப்பாணம், ஜூன் 18



வடமராட்சிக் கடலில் அண்மையில் மீன் பிடிக்கச் சென்ற நிலையில் காணாமற்போயுள்ள பருத்தித்துறை முனைப் பகுதியைச் சேர்ந்த மீனவரின் இரு பிள்ளைலக ளின் கல்விச் செலவு முழுவதையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொறுப்பேற்றுள்ளது.

பருத்தித்துறைமுனை மற்றும் கற்கோவளம் பகுதிகளில் இருந்து கடந்த மே மாதம் 27ஆம் திகதி இரவு இரண்டு படகுகளில் கடலுக்குச் சென்ற நான்கு மீனவர்கள் காணாமற்போயிருந்தனர்.

அவர்களில் ஒருவரான சுஜிக்குமாரின் இரண்டு பிள்ளைகளான க.பொ.த. சாதரண தரம் மற்றும் நான்காம் தரத்தில் கல்வி கற்றுவரும் இரு மாணவர்களும் கல்வியைத் தொடரும் வரை முழுமையான கல்விச் செலவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொறுப்பேற்றுள்ளது. பருத்தித்துறை கோரியடி பகுதியில் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நகர பிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்தார். (ச-100)

புதுக்குடியிருப்பு


# பாண்டியன்வீதி பாலத்தின் சீரமைப்புப்பணி ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூன் 18

கடந்த டித்வா பேரனர்த்தத்தின்போது உடைப்பெடுத்த முல்லைத்தீவுப் புதுக்குடியிருப்பு, பாண்டியன்வீதி பாலத்தைப் புதிதாக அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பாண்டியன்வீதிப் பாலத்தை அமைப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தொடர்ச்சியாக உரிய தரப்பினரை வலியுறுத்திவந்தார். இந்தநிலையில் குறித்தபாலத்தை அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளநிலையில், அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டார். (ச-246)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்முகப்பிரியா | ப. வைஷ்ணவி, | சு. நிதன்ராஜ் | திஷானா செல்வறாபன் | ப. அபிசாளினி | ஆறுமுக வடிவேல் தனோயன் | சு.கஜானன்

# தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டி யாழ். மாவட்டம் பதக்க வேட்டை!

**யாழ்ப்பாணம், ஜூன் 18**

**62ஆவது தேசியமட்ட கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வல்லுநர்ப் போட்டிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் பதக்கங்களை வாரிக் குவித்துள்ளனர்.**

இந்தப்போட்டிகள் கொழும்பு தியகம மஹிந்த ராஜபக்ச மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது. இதில் 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ப. அபிசாளினி தங்கப் பதக்கத்தை தனதாக்கியுள்ளார்.

18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் யாழ். மாவட்ட வீராங்கனைகள் முதல் மூன்று இடங்களையும் தமதாக்கியுள்ளனர். அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த சண்முகப்பிரியா பிறேமானந்தன்2.90 மீற்றர் உயரம் பாய்ந்து முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியைச் சேர்ந்த ப. வைஷ்ணவி 2.80 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாமிடமிடம் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த திஷானா செல்வறாபன் 2.60 மீற்றர் உயரம் பாய்ந்து மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். அத்துடன் 18 வயதுக்குபட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியைச் சேர்ந்த சு. நிதன்ராஜ் 4 மீற்றர் உயரத்தைத் தாவிப் பாய்ந்து முதலிடத்தைப் பிடித்து தங்கப் பதக்கத்தைத் தன்வசப்படுத்தியுள்ளார். மேலும் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி கல்லூரியை சேர்ந்த சு. கஜானன் 4.40 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

கோலூன்றி பாய்தல் 20 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் பங்கேற்ற அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த ஆறுமுக வடிவேல் தனோயன் 4.30மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார். (ச-422)

## சுகாதாரத் திட்டங்களைத் துரிதமாக்கி மக்கள் பயனடையச் செய்யுங்கள்!

### வடக்கு ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 18


வடக்கு மாகாணச் சுகாதாரத்திணைக்களதால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் மருத்துவச் சேவைகளும் மேலும் துரிதப்படுத்தப்பட்டு எவ்வித தாமதமுமின்றி உடனடியாக மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படவேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அதிகாரிகளுக்கு கட்டளையிட்டுள்ளார். வடக்கு மாகாணச் சுகாதார, சுதேச வைத்திய மற்றும் நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அமைச்சின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இதனை வலியுறுத்தினார். கடந்த 2025 ஆம் ஆண்டில் மருத்துவக் கருவிகள் மற்றும் உட்கட்டமைப்புக்கான கொள்வனவுச் செயன்முறைகள் ஆண்டிறுதி வரை தேவையின்றி இழுத்தடிக்கப்பட்டிருந்தது. நடப்பு ஆண்டிலும் அவ்வாறான நிர்வாகத் தாமதங்கள் எற்படாதவாறு, முன்கூட்டியே திட்டமிடப்பட்டு உரிய காலவரையறைக்குள் அனைத்துத் திட்டங்களுக்குமான கொள்வனவுப் பணிகளை விரைந்து நிறைவு செய்ய வேண்டும். எதிர்காலத்தில் சுகாதாரத் திணைக்களத்தின்கீழ் இயங்கும் ஒவ்வொரு துணைத் திணைக்களங்களுக்கும், மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மருத்துவமனைகளுக்கும் தனித்தனியான வரவு- செலவுத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அதற்கமையவே நிதி ஒதுக்கீடுகள் கோரப்படவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-66)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 18

சாவகச்சேரி கல்வயல், பெருங்குளம் அம்பலவாண வீரகத்திவிநாயகர் கோவில் பெருந்திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். பெருந்திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ச-9)




மாகாணமட்ட

## மென்பந்துத் துடுப்பாட்டம் நடேஸ்வரா சம்பியன்!

மாகாணமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் நடேஸ்வரா கல்லூரி பெண்கள் அணி சம்பியனாகி சாதனை படைத்துள்ளது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்கள் மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டி கடந்த 15, 16 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு பாலிநகர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. போட்டியில் நடேஸ்வரக் கல்லூரி பெண்கள் அணி முதற்தடவையாக சம்பியனாகி தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (ச-100-

### மாவட்டமட்ட எல்லே போட்டி

## வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக அணி சம்பியன்!

யாழ்ப்பாணம், ஜூன் 18

மாவட்டமட்டத்தில் பிரதேச செயலக அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற எல்லே போட்டியில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக அணி முதலாமிடத்தைப்பெற்றுச் சம்பியனாகியுள்ளது. இந்தப் போட்டி கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. குறித்த போட்டியில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் சார்பில் அம்பன் பிங்பொங் விளையாட்டுக்கழக வீரர்கள் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

# ஈரான்–அமெரிக்கா ஒப்பந்தம் சுவிஸில் நாளை கையெழுத்து

பேர்ன், ஜூன் 18

மேற்காசியப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் அமெரிக்கா-ஈரான் இடையேயான அமைதி ஒப்பந்தம் சுவிட்ஸர்லாந்தின் சொகுசு விடுதியொன்றில் நாளை வெள்ளிக்கிழமை கையெழுத்தாகவுள்ளது என்று சுவிட்ஸர்லாந்தின் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹோர்மூஸ் நீரிணையை மீண்டும் திறப்பது, மூமன் வளைகுடா பகுதியில் விதிக்கப்பட்ட தடைகளை நீக்குவது, ஈரானின் அணுசக்தி திட்டம் மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் குறித்து ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளை தொடங்குவது உள்ளிட்ட முக்கியமான அம்சங்களில் இரு நாடுகளும் உடன்பாட்டை எட்டியுள்ளன.

ஏற்கனவே அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைதளமான ட்ரூத் சோசியலில், ஈரானுடன் அமைதி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது., அதன் மூலம் ஹோர்மூஸ் நீரிணை திறக்கப்படுவதுடன், ஈரான் துறைமுகங்கள் மீதான அமெரிக்க கடற்படையின் முற்றுகை முடிவுக்கு வரும் என்று பதிவிட்டிருந்தார். போர் நிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் எட்டப்பட்டிருந்தாலும், அமெரிக்கா முடக்கி வைத்துள்ள ஈரானின் சொத்துகளை விடுவிக்க வேண்டும் என்றும், போரால் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் ஈரானின் உயர்மட்ட தேசிய பாதுகாப்பு கவுன்சில் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

G7 உச்சி மாநாட்டில் பங்கேற்க பிரான்ஸ் சென்றிருந்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், அமைதி ஒப்பந்த கையெழுத்து விழாவுக்கான அமெரிக்க பிரதிநிதிகள் குழுவை துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் வழிநடத்துவார் என தெரிவித்துள்ளார்.

ஈரான் தரப்பில் அந்நாட்டின் முதன்மைப் பேச்சுவார்த்தையாளர் முகமது பாகர் காலிபாப் கலந்துகொள்வார் என சுவிட்சர்லாந்து தெரிவித்துள்ளது. (ச-இ)



## G7 உச்சி மாநாட்டில் ட்ரம்ப் -மோடி சந்திப்பு

பாரிஸ், ஜூன் 18

பிரான்ஸின் எவியான் நகரில் பிரம்மாண்டமாக நடைபெற்று வரும் G7 உலகத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை நேரில் சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

மாநாட்டின் அமர்வுகளுக்கு இடையே பிரதமர் நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பும் நேரில் சந்தித்து பரஸ்பரம் கைகுலுக்கிக் கொண்டனர். பின்னர் இருவரும் அருகருகே அமர்ந்து சுமார் 5 நிமிடங்கள் சுமுகமாகப் பேசினர்.

கடந்த 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிரதமர் மோடி அமெரிக்காவுக்குச் சென்று அதிபர் ட்ரம்பைச் சந்தித்திருந்தார். அதன் பிறகு அமெரிக்க அரசு இந்தியப் பொருள்களுக்கு விதித்த கூடுதல் வரி விதிப்பால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவில் லேசான தொய்வு ஏற்பட்டது. இந்தச் சூழலில், சுமார் 16 மாத இடைவெளிக்குப் பிறகு இரு தலைவர்களும் தற்போது மீண்டும் நேரில் சந்தித்துப் பேசியுள்ளனர். (ச-இ)



## பிரான்ஸ் ஜி7 மாநாட்டில் புடினுக்குப் புதிய தடைகள்!

### ஜி7 தலைவர்கள் இணக்கம்

பாரிஸ், ஜூன் 18

உக்ரைனுக்கு எதிராகத் தொடரப்படும் போரை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி, ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளையும் இராஜதந்திர அழுத்தங்களையும் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு தீவிரப்படுத்த பிரான்சில் கூடியுள்ள ஜி7 உலக வல்லரசு நாடுகளின் தலைவர்கள் ஏகமனதாக இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் இராஜதந்திர வட்டாரங்கள் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ தகவலின்படி, ரஷ்யாவின் பிரதான வருவாய் ஆதாரங்களான மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விநியோகத்தின் மீது மேலும் கடுமையான தடைகளை விதிக்க ஜி7 தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிரித்தானியப் பிரதமர் கீர் ஸ்டார்மர் ரஷ்யாவின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை ஏற்றிச் செல்லும் பிரம்மாண்ட கப்பல்கள் மீது புதிய தடைகளை அறிவித்துள்ளார்.

கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி மேற்கத்திய தடைகளைத் தவிர்ப்பதற்காக ரஷ்யா இரகசியமாகப் பயன்படுத்தும் 'நிழல் கப்பல் படை' சார்ந்த 160 சர்வதேச நிறுவனங்களுக்கு எதிராகப் புதிய தடைகளை விதித்துள்ளார்.

மாநாட்டின் இடையே உக்ரேன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை நேரில் சந்தித்த ட்ரம்ப், ரஷ்யா இனிமேலும் பிடிவாதம் பிடிக்காமல் உடனே "சமாதான உடன்படிக்கையை செய்ய வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

## இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்

பாரிஸ், ஜூன் 18

இந்தோனேஷியாவில் நேற்றுக் காலை 6.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து வலுவான நில அதிர்வுகளும் ஏற்பட்டன.


பாலி மற்றும் மத்திய சுலவேசியின் சில பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அப்பகுதி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

மத்திய சுலவேசி மாகாணத்தின் தலைநகரான பாலியிலிருந்து 46 கிலோமீற்றர் கிழக்குதென்கிழக்கில் இந்த நிலநடுக்கத்தின் மையம் இருந்தது. இது சுமார் 10 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மற்றொரு நிலநடுக்கம் 5.2 ரிக்டர் அளவில் பதிவானது. (ச-இ)

## ஹோர்மூஸைக் கடந்தது ஈரான் எண்ணெய் கப்பல்

தெஹ்ரான், ஜூன் 18

சுமார் இரண்டு மாத காலமாக நீடித்து வந்த அமெரிக்கக் கடற்படையின் கடுமையான முற்றுகைக்குப் பின் ஈரானின் முதல் மசகு எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையில் இருந்து வெற்றிகரமாக வெளியேறியுள்ளன. இந்தத் தகவலை சர்வதேச கப்பல் போக்குவரத்து மற்றும் கண்காணிப்பு இணையதளங்கள் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளன. அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவான நல்லெண்ண அடிப்படையில் ஈரானியக் கப்பல்கள் வெளியேற அமெரிக்கா அனுமதித்துள்ளதாக சர்வதேச இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)



## மோடியும் நானும் பிரபலமான ஜோடி

### மெலோனி தெரிவிப்பு

நடைபெற்று வரும் ஜி7 உச்சி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனிக்கும் இடையே நடந்த சுவாரசியமான உரையாடல் தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது. அதில் இத்தாலி பிரதமர் மெலோனி சிரித்தபடியே "நாம் தான் இன்ஸ்டாகிராமில் மிகவும் பிரபலமான ஜோடி!" என்று கூறினார். இவர்களின் பெயர்களை இணைத்து இணையவாசிகளால் உருவாக்கப்பட்ட 'Melodi' என்ற ஹேஷ்டேக் மீண்டும் உலகளவில் ட்ரெண்டாகத் தொடங்கியுள்ளது. கடந்த மே மாதம் பிரதமர் மோடி ரோம் நகருக்குச் சென்றிருந்தபோது, மெலோனிக்கு இந்தியாவின் புகழ்பெற்ற 'பார்லே மெலோடி'



மிட்டாய் பைக்கெற்றை பரிசாக வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர்த் தீப் பரவலை கட்டுப்படுத்த கண்டாவளையில் விழிப்புணர்வு



கிளிநொச்சி,ஜூன்.18

தற்போது நிலவும் வறட்சி மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக ஏற்படும் திடீர்த் தீ அனர்த்தங்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு, கண்டாவளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அனர்த்தமுகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ் மாநகர தீயணைப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் செயலமர்வை நடத்தினர்.

குறித்த விழிப்புணர்வுச் செயலமர்வில் கண்டாவளை பிரதேச செயலர் பிருந்தாகரன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளர் அழகக்கோன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (க-113)

## அரையிறுதியில் கொலின்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 18

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் 'தலைவர் கிண்ணம் 2026' உதைபந்தாட்டத் தொடரில், கொலின்ஸ் அணி தனது தொடர்ச்சியான 3ஆவது வெற்றியுடன்அரையிறுதிக்குமுன்னேறியுள்ளது. வடமராட்சி சிரேஸ்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன், அமரர் க.சொக்கன் (சசிகுமார்) நினைவாக, அபிராமி இரும்பகத்தின் அனுசரணையோடு இந்தத் தொடர் நடத்தப்பட்டுவருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற லீக்ஆட்டத்தில் கொலின்ஸ் மற்றும் ஐக்கிய விளையாட்டுக்கழக அணிகள் மோதின. ஆரம்பம் முதலே இரு அணிகளும் அனல் பறக்கும் தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தின. இதனால் முதல் பாதியில் இருஅணிகளும் தலா ஒரு கோல் அடித்து சம நிலை வகித்தன. எனினும், இரண்டாவது பாதியில் ஆக்ரோஷமாக விளையாடிய கொலின்ஸ் அணி மேலும் ஒரு கோல் அடித்து மிரட்டியது. பதிலடி கொடுக்க ஐக்கிய அணி தீவிரமாகப் போராடியும் பலனளிக்கவில்லை. இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் அணி 'ஹட்ரிக்' வெற்றியைப் பதிவுசெய்து, அரையிறுதிக்குத் தகுதி பெற்ற முதல் அணியாக சாதனை படைத்தது. (எ-100)





## பிரதான வீதியில் குழி பயணிப்போர் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன்.18

கொழும்புத்துறை பிரதான வீதியில் பாண்டியன்தாழ்வுப் பகுதியில் ஒரு பகுதியில் குழி ஏற்பட்டுள்ளதால், அந்த வீதியூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குடிதண்ணீர் குழாய் பொருத்தும் திருத்த வேலையின் போது, வீதியின் ஒரு பகுதி உடைக்கப்பட்டு, பல நாள்களாகப் புனரமைக்கப்படாதுள்ளது.

குறித்த வீதியின் ஒரு பக்கம் சேதமாக்கப்பட்டு, குழியாகக் காணப்படுவதால், வாகனத்தில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன. எனவே போக்குவரத்துப் பயன்பாடு அதிகமாகவுள்ள குறித்த வீதியை உடனடியாக் சீர் செய்துதருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-17)

# நிரம்பி வழியும் திறைசேரி மக்கள் மீதோ வரிச்சுமை!

பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

மக்கள் மீது நாளுக்கு நாள் வரி விதித்து, அத்தியாவசியபொருள்களின் விலைகளை அதிகரித்து திறைசேரியில் ரில்லியன் கணக்கில் நிதியை அதிகரித்துக் கொள்வதால் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையமுடியாது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை முதலில் மேம்படுத்தவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

திறைசேரி ரில்லியன் கணக்கான நிதி கையிருப்பில் இருப்பதாக நிதியமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

மக்கள் மீது நாளுக்கு நாள் வரி விதித்து, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரித்துக் கொண்டு திறைசேரியில் ரில்லியன் கணக்கில் நிதியை வைத்துக் கொள்வதால் என்ன பயன்? இந்த நாட்டின் அபிவிருத்திச் செயல்முறை மிகப்பெரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது - என்றார். (ச-இ)

பெண் பணியாளர்கள் தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு பெண் பணியாளர்கள் தேவை.

தொடர்பு: 076 58 30 277

(CS 32004) A

வாடகைக்கு

மாணவ மாணவிகளுக்கும், வேலைசெய்யும் பெண்களுக்கும் மட்டும் அறை வாடகைக்கு உண்டு.

021 222 7801

மணமகள் தேவை

1985 ம் ஆண்டு பிறந்த D சித்திரை நட்சத்திரம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

T.P.: 077 659 0606

(cr47636) (N.1)

வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம் வருடாந்த பொதுக்கூட்ட அழைப்பு

மேற்படி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 01.07.2026 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறும். மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ள தகைமையுள்ள சங்க அங்கத்தவர்கள் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்
வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம்
இல. 27, பஜார் வீதி,
வவுனியா

CS/(61687) J-1

மரண அறிவித்தல்



அருட்சகோதரி எமிலியானா ஜெரெமியாஸ் தி.கு.

கரம்பொன், ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி எமிலியானா ஜெரெமியாஸ் 17.06.2026 புதன்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. 18.06.2026 இன்று வியாழக்கிழமை பி.ப 03.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்சகோதரி
ஜொய்லின் றாஜி ஸ்ரான்லி
மாகாணத்தலைவி.

(CS 32001) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேச சிறுவர்களுக்குப் போட்டி

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அலகின் ஏற்பாட்டில், பிரதேச சிறுவர் கழகங்களுக்கிடையில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. 7 - 10 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுக்குக் கீழ்ப்பிரிவாகவும், 11-14 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு மத்திய பிரிவாகவும், 15-18 வயதுக்கும் உட்பட்டவர்களுக்கு மேற்பிரிவாகவும் போட்டிகள் நடத்தப்படும். பிரதேசத்தில் கிராமியக் கலைகளையும், சிறார்களின் தனித்திறமைகளையும் வெளிக்கொணரும்நோக்குடன், பாடல், நாட்டார்பாடல், கிராமிய நடனம், பேச்சு, கவிதை, கட்டுரை, செய்யுள், ஓவியம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில்பங்குபற்ற விரும்பும் சிறுவர்கழக உறுப்பினர்கள், தமது பிரிவு சமுர்த்தி அலுவலரிடம் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(சு-9)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 . 05 . 1991 | 17 . 06 . 2026 |

### திரு.ஆனந்தராசா நிதர்சன் (நிலா)

(வட பிராந்திய வணிக நிர்வாகி YADEA Abans Auto)

ஆனந்தராஜா நிதர்சன் (நிலா) அவர்கள் நேற்று புதன்கிழமை (17.06.2026) அகால மரணமடைந்தார்.

அன்னார் ஆனத்தராஜா, ராஜகுமாரி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவகுமாரன், மற்றும் பிரசன்னா, சிவசங்கர், அஜீபா ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசோதாழினி அவர்களின் பாசமிகு மைத்துனரும், விகாசன், துருவன், அகரா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2026) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே:077 640 7104

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 32005) A

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 . 11 . 1948 | 17 . 06 . 2026 |

### கிருஷ்ணர் ஸ்ரீபத்மநாதன்

(தனியார் மின்சார ஒப்பந்தக்காரர்)

செல்லமுத்து வீதி, அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகவும், 1016, சந்தை வீதி, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் ஸ்ரீபத்மநாதன் அவர்கள் நேற்று (17.06.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - ராஜேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமகனும், சுதந்திரவதனியின் அன்புக் கணவரும், பாமினி, சிவாதரன், உமாதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன் சபிதா, அபிராமி ஆகியோரின் மாமனாரும், அபிநயா, பிரசன்னா, சாகித், பிரியனா, கபிலாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீரங்கநாதன், சிவசேகரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இந்திரநேசன் மற்றும் மகாநேசன், பாக்கியவதனா, நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2026) வியாழக்கிழமை 8.30 மணியளவின் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.30 மணியளவில் வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

070 7819 159
074 0934 418

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 32003)A

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### துரையப்பா இராசையா

ஒரு ஆண்டு கடந்தாலும் அப்பா,
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சில் என்றும் அழியாது.
அன்பின் அர்த்தம் கற்றுத் தந்த நீங்கள்,
எங்கள் வாழ்வின் ஒளியாகவே தொடர்கிறீர்கள்.

உங்கள் கரம் பிடித்து நடந்த நாட்கள்,
இன்று இனிய நினைவுகளாக மலர்கின்றன.
உங்கள் சிரிப்பும், உங்கள் பாசமும்,
என்றும் எங்கள் இதயத்தில் வாழ்கின்றன.

கண்கள் தேடும் உங்கள் முகம்,
நினைவுகளில் தினமும் தோன்றுகிறது.
காலம் பல மாறினாலும்,
உங்கள் இடம் எவராலும் நிரப்ப முடியாது.

அமரர் துரையப்பா இராசையா அப்பா,
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
முதலாம் ஆண்டு நினைவு நாளில்,
அன்பும் நன்றியும் கலந்த வணக்கங்களை செலுத்துகிறோம்.

"மறைந்தாலும் மறையாத நினைவாய்,
எங்கள் இதயங்களில் என்றும் வாழும் அப்பா"

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.61682) (N-1)

## மரண அறிவித்தல்

### (P)பான்சி விமலாதேவி சபாபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை, டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி)



"பிறிம்றோஸ் ஸ்கொட்" கண்டி வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், "ஜோய்லின்", உடுவில் வீதி, மானிப்பாயைத் தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்டு, இறுதியாக சபாபதிப்பிள்ளை வீதி, மருதனார் மடத்தினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்வி (P) பான்சி விமலாதேவி சபாபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (17.06.2026) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஸ்கொட் சரவணமுத்து சபாபதிப்பிள்ளை மற்றும் எலிசபெத் இராசம்மா சபாபதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு இளைய மகளும், காலஞ்சென்றவர்களான டெய்சி இராஜேந்திரா, ஜோர்ஜ் சபாபதிப்பிள்ளை, வில்லியம் ஜெயராஜசிங்கம், எட்வேட் பாலசிங்கம், சாமுவேல் செல்வராசா, அல்பிரற் ராஜேந்திரா, பிறிம்றோஸ் பத்மாதேவி, டயானா சகுந்தலா, அல்பேர்ட் குலராஜசிங்கம் (முன்னாள் அதிபர், யா/டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராஜேந்திரா, ஜரின், ஹரியற், தவமணி, லில்லி மற்றும் ஜீனி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாந்தி (கனடா), சறோஜா (USA), வினோ (UK), குமார் (UK) ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும், வசந்தி (அவுஸ்திரேலியா), ரஞ்சித் (USA), ஜயந்தி (அவுஸ்திரேலியா), துஷி (அவுஸ்திரேலியா), ராஜ் (அவுஸ்திரேலியா), ரஞ்சன் (அவுஸ்திரேலியா), நிரோ (அவுஸ்திரேலியா), பற்றி (அவுஸ்திரேலியா), பிறேமி (UK), நிம்மி (UK), பிலோ (கனடா), மைக்கல் (அவுஸ்திரேலியா), கிறிஷி (USA), றெஜி, (கனடா), ஷைலோ (USA), டறின் (கனடா), கிலிக் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரி பூதவுடல் அஞ்சலிக்காக யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள "White House" இல்இன்று (18.06.2026) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் வைக்கப்பட்டு மாலை 3.30 மணிக்கு அங்கு நடைபெறவுள்ள நல்லடக்க வழிபாட்டின் பின்னர் பூதவுடல் மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிசன் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சபாபதிப்பிள்ளை வீதி,
மருதனார்மடம்,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 47698)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு புதிய கட்டடம் கச்சாய் வீதியில் திறப்பு!

சாவகச்சேரி, ஜூன் 18

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக் கான புதிய கட்டடமொன்று சாவகச்சேரி நகரில் கச்சாய் வீதியில் அண்மையில் திறக்கப்பட்டது. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கட்டடத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத் தார். சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ம. கோணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, வடமாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் புத்திக சிறீவர்த்தன, வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மாரப்பன, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்




குமரன், மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமகா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சாணக்க டீ சில்வா மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து கொடிகாமம் பொலிஸ் பிரிவிலும் புதிய கட்டடத்தொகுதியொன்றும் திறந்து வைக்கப்பட்டது. (சு-131-19)

# உளவளப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 18

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருமணத்துக்கு தயாராகவுள்ள மற்றும் திருமணம் செய்து குறுகிய காலங்களேயான தம்பதியினர்களுக்கான உளவளத்துணை பயிற்சிப்பட்டறை அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எவ்.சீ.சத்தியசோதி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ச-இ)



## காலையில்...

கல்லூரிக்கு அனுப்பப்பட்டதில் முறைகேடுகள் இடம்பெற்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார். இதையடுத்து நேற்று நண்பகல் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் யோஷிதவை பிணையில் விடுவித்த நீதிமன்றம், அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதித்து உத்தரவிட்டுள்ளது. (அ-ம)

## பஸில்...

பயன்படுத்தியமை தொடர்பில் பஸில் ராஜபக்சவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முறைப்பாடு வழங்கியிருந்தது. அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் இடம்பெற்ற மேலதிக விசாரணைகளின் தொடர்ச்சியாகவே பஸில் ராஜபக்சவைக் கைது செய்யுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு வழங்கியுள்ளது. (அ-ம)

## இராணுவக்...

யுள்ளார். பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் இராணுவத்தால் கடைத் தொகுதியொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதுதொடர்பில் பொதுமக்கள்பலரும்பிரதேசசபைக்கு முறைப்பாடுகளை வழங்கியிருந்தனர். இதையடுத்தே, குறித்த இராணுவக் கட்டுமானத்தை உடனடியாக இடித்து அகற்றுமாறு யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதிக்கு வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன் அறிவித்தல் அனுப்பியுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இந்த சட்டவிரோதக் கட்டடம் இடித்து அகற்றப்பட வேண்டும் என்றும், அல்லது முறையான அனுமதிபெற்று கட்டுமானப் பணிகள் இடம்பெற வேண்டும் எனவும் தவிசாளர் சுகிர்தன் அனுப்பிவைத்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இல்லையேல் யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலின் பிரதி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (அ-ம-26)

## மிகப்பெரும்...

செம்மணி புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 27 ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போது புதைகுழிக்குள் இருந்து 14 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 5 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து இதுவரை 380 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 362 என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கையின் மிகப்பெரும் மனிதப் புதைகுழியாக மன்னார் சதொச மனிதப் புதைகுழியே இதுவரை இருந்து வந்தது. அந்தப் புதைகுழியில் இருந்து 376 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன. செம்மணிப் புதைகுழியில் இருந்து 380 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையில் இலங்கையின் மிகப்பெரும் மனிதப் புதைகுழியாக செம்மணிப்புதைகுழி உருப்பெற்றுள்ளது.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிறஞ்சன் அகழ்வுப் பணிகளில் முன்னிலையாகி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## எரிபொருள்...

நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்நிறுத்தம் காரணமாக எரிபொருள்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும், இலங்கையில் உடனடியாக எரிபொருள்களின் விலை குறைவதற்குச் சாத்தியம் இல்லை. அதிக விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள்கள் நாட்டில் தற்போதும் கையிருப்பில் உள்ளன என்பதே இதற்குக் காரணம். தற்போதுள்ள எரிபொருள் கையிருப்பு தீர்ந்து, குறைந்த விலையில் எரிபொருள்கள் இறக்குமதி செய்யத் தொடங்கிய பின்னர் விலைகளைக் குறைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம)

## மோ.சைக்கிள்...

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞரே உமையாள்புரம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன்மோதி விபத்துக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். இந்த விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-55)

## கோத்தாபயவின்...

நீதிமன்றத்தில் கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் ரிட்மனு தாக்கல் செய்திருந்தார். பொலிஸ் மா அதிபர் பிரியந்தவீரசூரிய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்டவர்கள் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்ட அந்த மனுதொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்துக்கு நேற்றுக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்தே, இந்த மனுவை இன்று விசாரிப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (அ-ம)

## கடத்திய...

நாகைப்பட்டினம் நோக்கி நேற்று 146 பேர் பயணிப்பதாக இருந்தது. அவர்களில் 26 பேர் தங்கம் கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் சுங்கத் திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டனர். முதற்கட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, அந்த நபர்கள் தங்கத்தை விழுங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று இரவு ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது நான்கு பேர் தங்கத்தை விழுங்கியமை உறுதிப்படுத்தப்பட்டது. (அ-ம-26)

## தொடர்...

பல்வேறு திருட்டுகளுடன் தொடர்புடைய நபருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது. கிளிநொச்சியில் கடந்த 2023ஆம் ஆண்டுமுதல் இடம்பெற்ற பல்வேறு திருட்டுகளுடன் தொடர்புடைய நபர், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தண்ணீர்பம்பியைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிரான குற்றச்சாட்டு ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட நிலையிலேயே 16 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-113)

## ரணில்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தற்போது அனைத்துத் துறைகளிலும் பெரும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றது. எனவே நாட்டை மிக விரைவாக மீட்க வேண்டிய அவசியம் தற்போது உள்ளது. கூட்டு எதிரணியில் உள்ள அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர் தான் ரணில் விக்கிரமசிங்க. இதைத் தற்போது மக்கள் தெளிவாகப் புரிந்துள்ளனர். வங்குரோத்து அடைந்த நாட்டை மீட்பதற்கு பத்து ஆண்டுகளாவது தேவை. ஆனால் வெறும் இரண்டு ஆண்டுகளில் ரணில் நாட்டை மீட்டார். இந்தச் சாதனையை எவரும் புறமொதுக்க முடியாது - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அமெரிக்கா - ஈரான் ஒப்பந்தம் இஸ்ரேலைக் கட்டுப்படுத்தாது!

## அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



பாரிஸ், ஜூன் 18

ட்ரம்ப் உருவாக்கியுள்ள அமெரிக்க - ஈரான் அமைதி ஒப்பந்தம் எங்களை கட்டுப்படுத்தாது என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இட்டாமர் பென் கிவிர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பென் கிவிர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ட்ரம்பின் ஒப்பந்தம் எங்களைக் கட்டுப்படுத்தாது. அமெரிக்காவுக்கு இஸ்ரேல் அடிபணியாது. நாங்கள் ஒரு சுதந்திரமான, இறையாண்மை கொண்ட தேசம். இஸ்ரேல் குடிமக்களுக்கும், இஸ்ரேலிய பாதுகாப்புப் படை வீரர்களுக்கும், யூத மக்களுக்கும் நாங்கள் ஆற்ற வேண்டிய கடமை உள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாடு கடத்தப்பட்டு துன்புறுத்தப்பட்ட, கொல்லப்பட்ட யூதர்களுக்கு இஸ்ரேல் தேசத்தில் பாதுகாப்பு வழங்க வேண்டியது எங்கள் வரலாற்றுப் பொறுப்பாகும்.

லெபனானிலிருந்து இஸ்ரேலை நோக்கி ஏவப்படும் எந்தவொரு ட்ரோன் அல்லது ஏவுகணைக்கும் பதில் தாக்குதல் நடத்தப்படும். எங்கள் பாதுகாப்பை உறுதி செய்யாத, எங்களை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாத இந்த ஒப்பந்தத்தில் நாங்கள் பங்காளிகள் அல்ல.

ஹிஸ்புல்லாவை ஒழிப்பதை விடக் குறைவான எதற்கும் நாம் சமரசம் செய்துகொள்ளக்கூடாது - என்றார். (ச-இ)

GLOBAL IMMIGATEWAY
YOUR GATEWAY TO THE WORLD
இப்போது யாழ்ப்பாணத்திலும்
கிளை திறப்பு விழா
● இன்று 18.06.2026 வியாழக்கிழமை
● காலை 11.00 தொடக்கம் மாலை 5.00 மணி வரை
18 + வருட அனுபவமுள்ள Immigration நிபுணர்களிடமிருந்து UK, Australia, Newzealand, USA, Europe மற்றும் பல நாடுகளுக்கான இலவச பதிவுகள் மற்றும் இலவச ஆலோசனை, அனைத்துவகை Visa சேவைகையும் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட அறிமுக சலுகைகளைப் பெற நேரில் வருகைதாருங்கள்.
GLOBAL IMMIGATEWAY
Taffs Road, Lyden Junction, Jaffna.
021 222 9452, 076 817 5692, 074 276 4353
உங்கள் வெளிநாட்டு கனவுகளுக்கான நம்பகமான வழிகாட்டி
(CS/61683) J-1

### காரைநகர் அபிவிருத்திச் சபை
### பாரவூர்தி (Lorry) பகிரங்க ஏல விற்பனை தொடர்பான அறிவித்தல்

எமது சபையினால் குடிநீர் விநியோகத்திற்கு உபயோகிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள வாகனமும் (Vehicle), பவுசரும் (Bowser) வாகன இலக்கம் -LO XXXX தயாரிப்பு Lanka Ashok Leyland வகை (Model) Tusker Super 1618 அதனோடிணைந்த (Cargo) கொள்ளளவு (Cargo Capacity) 13200Ltr நீர் கொள்கலன் தாங்கி பகிரங்க ஏலத்தில் 29.06.2026 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சின்னாலடி காரைநகர் என்னும் முகவரியில் அமைந்துள்ள காரைநகர் அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. கொள்கலன் தாங்கியை பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்கள் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை எமது சபை தலைமை அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

செயலாளர் 18.06.2026
காரைநகர் அபிவிருத்திச்சபை
சின்னாலடி, காரைநகர். T.P : 0212211757

(CR/47637) J-1

### மரண அறிவித்தல்



தோற்றம் 13.10.1946 — மறைவு 17.06.2026

**திருமதி தவராசா நாகேஸ்வரி**

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா நாகேஸ்வரி அவர்கள் நேற்று (17.06.2026) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற வைரமுத்து - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், வைரமுத்து தவராசாவின் அன்பு மனைவியும், பகீரதனின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரியின் (யாழ்.போதனா வைத்தியசாலை - கண் பிரிவு) பாசமிகு மாமியாரும், யதுர்ஷா, சுவேதிக்கா, விதுஷிகா ஆகியோரின் பேர்த்தியாரும், காலஞ்சென்ற இராசதுரை, ரேவதியம்மா, இரத்தினேஸ்வரி மற்றும் சதாசிவம், இராஜேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நாகம்மா, காலஞ்சென்ற கண்ணகை மற்றும் தங்கராசா, மோகனராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 4055 992

(CS 31999)A

### மரண அறிவித்தல்



மலர்வு 17.11.1951 — உதிர்வு 17.06.2026

**சொக்கலிங்கம் சிவபாலன் (சிப்பி)**
**(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர், அங்கத்தவர், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம்)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், 54, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் சிவபாலன் (சிப்பி) அவர்கள் நேற்று (17.06.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான நடராஜா - மகேஷ்வரிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தகௌரியின் அன்புக் கணவரும், நடராஜா, விமலதாசன், பாஸ்கரன், வசந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோபிநாத்தின் அன்புத் தந்தையும், காயத்திரியின் அன்பு மாமனாரும், சாஹிஷ்ணுவின் அன்பு அப்பப்பாவும், கௌரிதேவி, ஸ்ரீஸ்கந்தகௌரிதாசன், விஜயலக்சுமி, காலஞ்சென்றவர்களான விமலராணி, கார்த்திகா மற்றும் ஜோர்ஜ் புவல், வரதராஜா, ரஜனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2026) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 046 0604

(CS/31998) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.